கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 119 | 04-11-2025 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 119 | 04-11-2025 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

தெருநாய்கள் தொல்லை தொடர்பான வழக்கு;

மாநில தலைமைச் செயலாளர்கள் சுப்ரீம் கோர்ட்டில் ஆஜர்: 7ம் தேதி புதிய வழிகாட்டல் நெறிமுறைகள் வெளியாகிறது

புதுடெல்லி: நவ.4–

தெருநாய்கள் தொல்லை தொடர்பான வழக்குகள் நாடு முழுவதும் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இதுகுறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீண்ட காலமாக விசாரணையில் உள்ளது. முன்னதாக, விலங்குகள் இனக்கட்டுப்பாட்டு விதிகளை அமல்படுத்தியது குறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யாத மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் நேரில் ஆஜராக உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை மதிக்காததால், சில மாநில அரசுகளுக்கு நீதிமன்றம் கடும் கண்டனத்தையும் தெரிவித்திருந்தது. இந்த பின்னணியில், இந்த வழக்கு தொடர்பான விசாரணை இன்று மீண்டும் நடைபெற்றது.

இந்த வழக்கை நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா மற்றும் என்.வி. அன்ஜாரியா அடங்கிய அமர்வு இன்று விசாரித்தது. அப்போது, தமிழ்நாடு உட்பட பெரும்பாலான மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் நேரில் ஆஜராகி, விதிகளைப் பின்பற்றியது தொடர்பான பிரமாணப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இனிவரும் விசாரணைகளில் அவர்கள் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளித்தனர். அதேசமயம், எதிர்காலத்தில் நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றுவதில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால், மீண்டும் நேரில் ஆஜராக உத்தரவிடப்படும் என்றும் கடுமையாக எச்சரித்தனர். மேலும், இந்த வழக்கில் இந்திய விலங்குகள் நல வாரியத்தையும் ஒரு எதிர்வாதியாகச் சேர்த்த நீதிபதிகள், நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்த இடையீட்டு மனுக்களை வைப்புத்தொகை நிபந்தனையின்றி அனுமதித்தனர்.

விசாரணையின் போது, அரசு அலுவலக வளாகங்களில் தெருநாய்களுக்கு உணவளிப்பது குறித்து நீதிபதிகள் முக்கிய கருத்து ஒன்றை வெளியிட்டனர். இதுகுறித்து நீதிபதி விக்ரம் நாத், 'அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், அங்குள்ள நாய்களுக்கு ஆதரவளித்து ஊக்குவிக்கும் விவகாரம் தொடர்பாக சில நாட்களில் உத்தரவு பிறப்பிப்போம். வரும் புதன் கிழமைக்குள் மூத்த வழக்கறிஞர் கவுரவ் அகர்வால், அனைத்து மாநில அரசுகளில் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரங்களையும் ஆய்வுக்கு உட்படுத்தி ஒருங்கிணைந்த குறிப்பை தாக்கல் செய்ய வேண்டும்.

இவ்வழக்கில் கூடுதல் மனுக்கள் தாக்கல் செய்ய வேண்டியிருந்தால், பதிவாளரிடம் உரிய கட்டணத்தை செலுத்தி புதிய மனு தாக்கல் செய்யலாம். அந்த மனுவையும் விசாரித்த வரும் 7ம் தேதி இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படும். அன்றைய தினம் தெருநாய்கள் தொடர்பான வழக்கில் வழிக்காட்டல் நெறிமுறைகள் அறிவிக்கப்படும்' எனக்கூறி வழக்கு விசாரணையை 7ம் ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க நடவடிக்கை தேவை: முதலமைச்சர் கடிதம்

சென்னை: நவ. 4–

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்களும், நேற்று (03.11.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு இன்று (03.11.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 03.11.2025 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களையும். அவர்களது மூன்று இயந்திரமய மாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளையும் சிறைபிடித்துள்ள இலங்கைக் கடற்படையினர், அதே நாளில், மற்றொரு சம்பவத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களையும், அவர்களது நாட்டுப் படகினையும் சிறைபிடித்துள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் வாழ்க்கையும், அவர்களது வாழ்வாதாரமும் கடலுடன் பிரிக்கமுடியாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர். இதுபோன்று தொடர்ச்சியாக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தமிழ்நாட்டின் மீனவ சமூகத்தினரிடையே ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாக கவலையோடு தெரிவித்துள்ள முதலமைச்சர். ஒவ்வொரு கைது நடவடிக்கையின்போதும், மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களது குடும்பத்தினரிடையே ஆழ்ந்த அச்ச உணர்வையும், பாதுகாப்பற்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய நிலவரப்படி 114 மீனவர்களும், 247 படகுகளும் இலங்கை வசம் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் முதலமைச்சர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே, இலங்கை அரசால் சிறைபிடிக்கப் பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

திமுகவில் இருப்பவர்களை குறி வைத்து அடிக்க பாஜக தயாராகி விட்டது என அமைச்சர் கே.என்.நேரு குற்றச்சாட்டு!!

சென்னை : நவ.4–

திமுகவில் இருப்பவர்களை குறி வைத்து அடிக்க பாஜக தயாராகி விட்டது என அமைச்சர் கே.என்.நேரு குற்றம் சாட்டி உள்ளார். அடிக்க அடிக்க பந்து போல் எழ வேண்டுமே தவிர துவண்டு விடக் கூடாது என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தருமபுரி: நவ.4–

தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தருமபுரி மாவட்டத்திற்கு நேற்று (3.11.2025) வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தருமபுரி நகராட்சிக்கு அருகிலுள்ள ஏ.ரெட்டிஅள்ளி கிராமம். சோகத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் 10 ஏக்கர் பரப்பளவில் 39.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் நடைபெற்று வரும் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகள் அனைத்தையும் விரைவில் முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இப்புதிய பேருந்து நிலையத்தில் தற்போது தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கடைகள். உணவகங்கள், கிஜிவி மையம், பொருட்கள் வைப்பதற்கான பாதுகாப்பு அறை, கழிவறைகள். நேரக் காப்பாளர் அறை. தாய்மார்கள் பாலூட்டும் அறை, மேற்கூரை அமைக்கும் பணிகள், பயணிகள் மற்றும் ஓட்டுநர்கள் ஓய்வு அறைகள், 55 எண்ணிக்கையிலான பேருந்து நிறுத்தும் இடம், நடைபாதை, பயணிகள் அமரும் இடத்தில் டைல்ஸ் பதிக்கும் பணிகள், பிரதான சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் போன்ற பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அங்கு நடைபெற்று வரும் அலுவலகக் கட்டடம், சிறு பாலங்கள், மழைநீர் வடிகால் பணிகள் போன்ற கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், இப்பணிகள் அனைத்தையும் விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்

தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தடங்கம், அதியமான்கோட்டை மற்றும் பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 1,733 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டு சுற்றுச்சூழல் அனுமதி 4.11.2024 அன்று பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 17.8.2025 அன்று தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இத்தொழிற் பூங்காவில் உட்புறசாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்கு, நீர் விநியோகம் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள மொத்தம் 937.36 கோடி ரூபாய் நிதி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற் பூங்காவில் 1.35 கி.மீ நீள அணுகு சாலைக்கான பணி முழுவதும் 14.04 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட் டுள்ள துடன், பூங்காவினையொட்டி யுள்ள தேசிய நெடுஞ்சாலை 44ன் சேவைச் சாலையை 5.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அகலப்படுத்த பணி ஆணை வழங்கப்பட்டு, இப்பணி மார்ச் மாதம் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

மேலும், முதற்கட்டமாக 200 ஏக்கர் நிலப்பரப்பில் மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 103.08 கோடி ரூபாய் திட்ட நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, அதில் முதற்கட்டமாக 66.70 கோடி ரூபாய்க்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஜூன் 2026ல் முடிக்கப்படும். இதுவரை, இத்தொழிற் பூங்காவில் 9 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் 40.91 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்தொழிற் பூங்காவின் விரிவாக்கத்திற்காக (நிலை மிமி க்காக), தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தடங்கம் மற்றும் பாலஜங்கமன ஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 690 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, அதில் 132 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்த அரசின் நிருவாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து தற்போது நில எடுப்பு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் 558 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தினை சிப்காட் நிறுவனம் பெயரில் நில உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தருமபுரி சிப்காட் தொழிற் பூங்கா முழு செயல்பாட்டிற்கு வரும்பொழுது, தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழிற்பூங்காக்களில் ஒன்றாக திகழும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்தொழிற்பூங்காவில் பேட்டரி மற்றும் மின்வாகனங்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்

அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை பதிவிட்டு மக்கள் ஆதரவை பெற வேண்டும் :எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்",

சென்னை: நவ.4–

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தீவிரமாக தயாராகி வருகிறார்.இதன்படி அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி பிரிவு நிர்வாகிகளோடு ராயப்பேட்டையில் உள்ள தலைமை கழகத்தில் அவர் ஆலோசனை நடத்தினார்.39 மாவட்டங்களிலும் உள்ள தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.இன்றைய காலகட்டத்தில் அரசியல் கட்சிகளின் கருத்துக்களை சமூக வலைத்தளங்கள் மூலமாகவே விரைவாக கொண்டு சேர்க்க முடியும் என்பதால் அதனை செயல்படுத்துவதில் அ.தி.மு.க.வினர் முக்கிய பங்காற்ற வேண்டும் என்கிற வகையிலேயே 2 நாட்கள் நடைபெற்ற கூட்டத்திலும் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது.இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஐ.டி. பிரிவு நிர்வாகிகள் தங்களது மாவட்டங்களில் கட்சிக்கு ஒவ்வொரு தொகுதியிலும் செல்வாக்கு எப்படி உள்ளது? என்பதை தெரிந்து வைத்துக் கொண்டு அதற்கேற்ற வகையில் தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகளை செயல்பட வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகிய இரண்டு தலைவர்களும் முதலமைச்சராக இருந்தபோதும் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும் சாதனை பட்டியலை தயாரித்து அதனை சமூக வலைத்தளங்கள் மூலமாக கொண்டு சேர்த்து மக்களின் ஆதரவை முழுமையாக பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் எப்படி செயல்படுகிறார்கள்? கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும் அவர்கள் முழுமையாக ஒத்துழைப்பு அளிக்கிறார்களா? என்பது பற்றியும் ஐ.டி. பிரிவினரிடம் எடப்பாடி பழனிசாமி கேட்டு உள்ளார். சமூக வலைத்தளங்களில் நாகரீகமான கருத்துக்களை பதிவிட்டு அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியில் அமரும் வகையில் தகவல் தொழில்நுட்ப அணிகளை சேர்ந்தவர்கள் முழுமையாக களம் இறங்கி செயல்பட வேண்டும் எனவும் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி இருக்கிறார்.இந்த 2 நாட்கள் கூட்டத்திற்கு பிறகு நாளை மறுநாள் மாவட்ட செயலாளர்களின் கூட்டம் நடைபெறுகிறது.ஐ.டி. பிரிவு நிர்வாகிகளோடு நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி திரட்டி வைத்துள்ள தகவல்களை வைத்துக்கொண்டு மாவட்டச் செயலாளர்களுடன் ஆலோசனை நடத்துவதற்கு எடப்பாடி பழனிசாமி முடிவு செய்திருக்கிறார்.இந்த கூட்டத்தின் போது மாவட்டச் செயலாளர்களுக்கும் எடப்பாடி பழனிசாமி பல அறிவுரைகளை வழங்க உள்ளார். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாரியாக இருந்து வரும் மக்கள் பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தி ஐ.டி. பிரிவினர் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ள உள்ள பிரசாரங்களுக்கு மாவட்டச் செயலாளர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் இதை மீறி செயல்படுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நாளை மறுநாள் நடைபெறும் கூட்டத்தின் போது எடப்பாடி பழனிசாமி எச்சரிக்கை விடுக்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.",

இணைப்பு விழா பொதுக்கூட்டம் ....

திருமலை, நவ. 4–

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் தொகுதிஇளையாங்கன்னி கிராமத்தில் செங்கம் தொகுதிச் செயலாளர் செல்வராஜ் அவர்கள் ஒருங்கிணைப்பில் மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 500க்கும் மேற்பட்டவர்கள் தங்களை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனத் தலைவர் #முத்தமிழன்_தி_வேல்முருகன் அவர்கள் போராட்டத்தாலும் போர்க் குணத்தாலும் ஈர்க்கப்பட்டு தங்களை இணைத்துக் கொள்ளும் இணைப்பு விழா மற்றும் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் மல்லி வினோத் அவர்கள் முன்னிலை வகிக்க மாநில அமைப்புக்குழு உறுப்பினர் கண்ணதாசன் அவர்கள் ஒழுங்கு செய்தார்.

தலைமை நிலையச் செயலாளர் கனல் உ. கண்ணன், ஊடகப்பிரிவு தலைமை ஒருங்கிணைப்பாளர் வடலூர் சோதி.குமரவேல், கொள்கை விளக்க அணி தலைவர் திருவொற்றியூர் மாரிமுத்து, செஞ்சி தொகுதிச் செயலாளர் செ. இராசநாயகம்மற்றும் செஞ்சி ஒன்றிய செயலாளர் ராஜா உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்ற, திருவண்ணாமலை தொகுதிச் செயலாளர் யேசுராஜ், தெற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் சிவா, கிழக்கு மாவட்ட இளைஞரணிச் செயலாளர் இரா.தன்ராஜ், கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதிப் பொறுப்பாளர்கள் பனையூர் குரு, அருண், ஆரணி தொகுதிப் பொறுப்பாளர்கள் கார்த்திகேயன், சுரேஷ், அரவிந்த் உள்ளிட்ட கட்சி முன்னணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தண்டராம்பட்டு ஒன்றியச் செயலாளர் ஜெயசீலன் நன்றியுரை வழங்கினார்.

மாநில தடகளப் போட்டி.

சேலம் மாணவ,மாணவிகள் 6 பேருக்கு பதக்கம்.

தஞ்சாவூரில் நடைபெற்ற மாநில அளவிலான தடகளப் போட்டியில் சேலம் மாணவ, மாணவிகள் 6 பேர்பதக்கம் வென்றுள்ளனர்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கான ஆர்டிஎஸ் 66ஆவது மாநில அளவிலான தடகள சாம்பியன்ஷிப் போட்டி தஞ்சாவூரில் நடைபெற்றது. இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கலந்துகொண்டு விளையாடினர்.

சேலம் காந்தி விளையாட்டு மைதானத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவிகள் தீப்த சாரனா, கனிஷ்காஸ்ரீ, தன்ஷிகாஸ்ரீ, தடகள வீராங்கனை மகாலட்சுமி மற்றும் வீரர்கள் கிரிஷ்சாந்த், சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் 14 வயதுக்கு உட்பட்டோருக்கான 400 மீட்டர்ஓட்டப் பந்தயத்தில் தீப்தா சாரனா, வெள்ளிப் பதக்கம், 19 வயதுக்கு உள்பட்டோருக்கான போல்வால்ட் போட்டியில் மகாலட்சுமி 2.40 மீட்டர்உயரம் தாண்டி தங்கப் பதக்கமும் பெற்றனர்.

17 வயதுக்கு உள்பட்டோருக்கான போல்வால்ட் போட்டியில் கனிஷ்காஸ்ரீ 2.65 மீட்டர்உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கமும், 17 வயதுக்கு உள்பட்டோருக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் தன்ஷிகா ஸ்ரீ 1.55 மீட்டர்உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கமும் பெற்றனர்.

இதேபோல், 17 வயதுக்கு உள்பட்டோருக்கான 400 மீட்டர்ஓட்டத்தை 49.88 விநாடிகளில் கடந்த மாணவர்சுதர்சன் தங்கப் பதக்கமும், 19 வயதுக்கு உள்பட்டோருக்கான மும்முனை தாண்டுதல் பிரிவில் 14.01 மீட்டர்நீளம் தாண்டி கிரிஷ்சாந்த் வெண்கலம் பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சேலம் மாவட்ட விளையாட்டு அலுவலர்சிவரஞ்சன், பயிற்சியாளர்இளம் பரிதி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

மேல்செவலம்பாடி குப்பம்: ஆலயப் பணம் வழங்கப்படவில்லை என சிற்பி மனோகரன் குற்றச்சாட்டு

விழுப்புரம் மாவட்டம்: மேல்செவலம்பாடி குப்பம் பகுதியில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் புதுப்பிப்பு பணியை செய்து முடித்தும், தமக்குக் கூலி வழங்கப்படவில்லை என சிற்பிமனோகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

புத்தகரம் பகுதியைச் சேர்ந்த சிற்பி முனுசாமியின் மகன் மனோகரன், இரண்டு வருடங்களுக்கு முன்பு மேல்செவலம்பாடி குப்பம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தை புதுப்பிக்கும் ஒப்பந்தப் பணியை பெற்றிருந்தார். பழைய கோயிலை இடித்து, புதிய கோயில் கட்டுமானம் செய்ய ரூ.31 லட்சம் மதிப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதில் தொடக்க அட்வான்ஸாக ரூ.50,000 மற்றும் பிற கட்டங்களாக மொத்தம் ரூ.8 லட்சம் வரை வழங்கப்பட்டதாக கூறியுள்ளார். அதன் பின் எந்த தொகையும் வழங்கப்படவில்லை என்றும், தன்னுடைய சொந்த செலவில் கோவிலின் அனைத்து சிற்ப மற்றும் கட்டுமானப் பணிகளையும் முடித்துவிட்டதாகவும் மனோகரன் தெரிவித்துள்ளார்.

வேலை முடிந்த பிறகும் பணம் வழங்கப்படாததோடு, தாம் கேட்கும்போது “காவல் நிலையம் வரைக்கும் அழைத்துச் சென்று கட்டப்பஞ்சாயத்து செய்து மிரட்டப்படுவதாகவும் அவர் கூறினார்.

“இரண்டு வருட உழைப்பும் செலவுமெல்லாம் வீணாகி விட்டது. எனவே எனக்கு உரிய தொகையை வழங்கி நீதியளிக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என சிற்பிமனோகரன் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தான் பீகார் உள்ளிட்ட பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்கள்நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்

முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேச்சு.....

செஞ்சி, நவ. 4–

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மேல்மலையனூர் கிழக்கு, மதியம் ,மேற்கு ஆகிய ஒன்றி திமுக சார்பில் வாக்குச் சாவடிமுகவர்கள், பூத் டிஜிடல் ஏஜன்ட் நிர்வாகிகள்கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் மேல்மலையனூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய அவைத் தலைவர்கள் மன்ன ஏழுமலை, ஆறுமுகம், உதயகுமார் ஆகியோர் தலைமை தாங்கினர். செஞ்சி சட்டமன்றத் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார்.

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர்நெடுஞ் செழியன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

திமுக நிர்வாகிகள் அனைவரும் கவனம் செலுத்தி திமுக ஆட்சியில்முதலமைச்சர் செய்த சாதனைகளை ஒவ்வொருவீடாகஎடுத்து சொல்லி வாக்குகள் சேகரிக்க வேண்டும் ,செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதி களிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெறுவதற்கு அனைவரும் கடுமையாக உழைக்கவேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் நவம்பர் 4 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை செயல் படுத்த உத்தரவிட்டுள்ளது. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முன்னெடுப்புடன் வாக்குச்சாவடி முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கவனமுடன் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் நீக்குதல் பணியை மேற்கொள்ள வேண்டும்.

மேலும்10 ஆண்டு காலமாகபிரதமர் மோடி செய்கின்ற பல்வேறு துரோகத்தை தாங்கிக் கொண்டு இன்றைக்கு இந்திய பொருளாதாரத்தில் ஒன்றிய அரசு பின் தங்கி உள்ளது ஆனால் தமிழ்நாடு முந்தி வருகிறது என்ற நிர்வாகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் வரலாறு படைத்து வருகிறார் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களை தோற்கடித்த வரலாறு திமுகவுக்கு உள்ளது .பிரதமர் மோடி அவர்களே எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறும் என மக்கள் தீர்மானித்துள்ளனர் அந்த வகையில் திமுக வெற்றி பெறுவது உறுதி.

ஆனால் பீகார் மக்கள் தமிழ்நாட்டில் அவமதிக்கப் படுகிறார்கள் என பீகார் தேர்தல் பிரச்சாரத்தில் தவறாக தெரிவித்துள்ள பிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டில் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தான் பீகார் உள்ளிட்ட பிற மாநிலத்தை சேர்ந்த மக்கள் நிம்மதியாக வாழ்ந்துவருவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ உறுதிபட தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன் ,ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பிரமணியன் , நாராயணமூர்த்தி மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வந்தவாசி வட்ட எக்ஸ்னோரா புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா...!

வந்தவாசி, நவ 04:

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்ட எக்ஸ்னோரா கிளை புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா முன்னிட்டு ஐம்பெரும் விழா (ஒரு லட்சம் மரக்கன்றுகள் – பனை விதைகள் நடும் திட்டம் தொடக்க விழா, புதிய நிர்வாகிகள் பதவியேற்பு, முன்னாள் எக்ஸ்னோரா தலைவர்கள் பாராட்டு, புதிய நிர்வாகிகள் பாராட்டு, நலத் திட்டங்கள் வழங்கும் விழா) நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு எக்ஸ்னோரா கிளை தலைவர் (பொறுப்பு) பா.சீனிவாசன் தலைமை தாங்கினார். மேனாள் அரிமா சங்க ஆளுநர் வி.எஸ். தளபதி, மேனாள் மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ். குமார், சென்னை யூனியன் வங்கி மேலாளர் சு. விஜயசேகர், முன்னாள் எக்ஸ்னோரா கிளை தலைவர் மலர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் செயலாளர் மற்றும் மாவட்ட மரக்கன்றுகள் நடும் பணி இயக்குநர் ம.ரகுபாரதி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, எக்ஸ்னோரா மாநில நிதி நிர்வாக தலைவர் டி.ஏ. முனவர்தீன் பங்கேற்று மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்றும், சமூகத்தின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய எக்ஸ்னோரா நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் மாவட்ட எக்ஸ்னோரா தலைவர் பா.இந்திரராஜன் புதிய நிர்வாகிகளை பதவியில் அமர்த்தி விழா உரை நிகழ்த்தினார். மாவட்ட எக்ஸ்னோரா செயலாளர் வெங்கடேச பெருமாள், மாவட்ட எக்ஸ்னோரா துணை தலைவர் அப்துல் கலீம், சக்தி எக்ஸ்னோரா தலைவர் தேவிகா ராணி, பூங்குயில் சிவக்குமார் ஆகியோர் மகிழ்வுரை வழங்கினர். மேலும் தேசிய பசுமைப்படைமாணவர்களுக்கு ஒருங்கிணைப்பாளர் ம.ரகுபாரதி முன்னிலையில் நற்சான்றிதழ் வழங்கப்பட்டது. இறுதியில் புதிய தலைவராக பொறுப்பேற்ற இரயில்வே சு.தனசேகரன் ஏற்புரை நிகழ்த்தினார்.

புதிய நிர்வாகிகளாக, சு. தனசேகரன் தலைவராகவும், பா. சீனிவாசன், க.வாசு ஆகியோர் துணை தலைவராகவும், சி.வினோத்குமார் செயலாளராகவும், அ. பூவிழி பொருளாளராகவும், இணை செயலாளராக வந்தை குமரன், துணை செயலாளராக ஆர். பாஸ்கரன், இணை பொருளாளராக வெ.அரிகிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளராக க.பூபாலன், இயக்குநராக என்.சுரேஷ் பாபு, ஆலோசகர்களாக மலர் சாதிக், ம.ரகுபாரதி உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் பதவி ஏற்றனர். அனைவருக்கும் புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் துணைத் தலைவர் க.வாசு நன்றி கூறினார்.

ரோடு ஷோவுக்கு வழிமுறைகள் வகுப்பது குறித்து நவ.6ல் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை : நவ.4–

பரப்புரை, ரோடு ஷோ கூட்டங்களை கட்டுப்படுத்த நெறிமுறைகள் வகுப்பதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் நவ.6ம் தேதி நடைபெறும் என தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மூத்த அமைச்சர்கள் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பங்கேற்க, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சட்டமன்ற, நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கரூர் துயர சம்பவத்தைத் தொடர்ந்து அரசியல் கட்சி தலைவர்களின் ரோடு ஷோக்களுக்கு காவல் துறை அனுமதி வழங்க மறுத்தது. அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், ‘அரசியல் கட்சித் தலைவர்களின், ரோடு ஷோ மற்றும் பொதுக் கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கும் போது, பின்பற்ற வேண்டிய நிலையான வழிகாட்டு விதிமுறைகளை, 10 நாட்களுக்குள் வகுக்க வேண்டும்‘ என கெடு விதித்தது.

இதைத் தொடர்ந்து, கரூரில் நடந்தது போன்ற துயரம் இனி நடக்காமல் இருக்க வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டம் மற்றும் ரோடு ஷோக்களின் போது கூட்டங்களை கட்டுப்படுத்துவற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பது தொடர்பாக வரும் நவ.,6ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மூத்த அமைச்சர்கள் தலைமையில் தலைமை செயலகத்தில் காலை 10.30 மணிக்கு நடக்கும் இந்தக் கூட்டத்திற்கு, அங்கீகரிக்கப்பட்ட, பார்லிமென்ட், சட்டசபையில் பிரதிநிதித்துவம் உள்ள அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன் சோதனை

மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 04 :

மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948 பிரிவு 17எ ன் படி, 16.10.2025 தேதியிட்ட இந்திய அரசிதழ் அறிவிப்பு எண். ஷி.ளி. 4698(ணி) இல் அறிவிக்கப்பட்டுள்ளபடி, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி பகுதிகளில் 2027 ஆம் ஆண்டுக்கான இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன்மாதிரி சோதனை நடத்தப்படவுள்ளது. 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பானது இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பபாகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன் சோதனையை தமிழ்நாடு மாநில அரசுடன் கலந்தாலோசித்து திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆர்.கே. பேட்டை வட்டத்தில் குறிப்பாக கிராமப்புற பகுதிகளான வெள்ளாத்தூர், வங்கனூர், ஸ்ரீ காளிகாபுரம், சந்தானவேணுகோபாலபுரம், இராஜநகரம், இராகநாயுடுகுப்பம், காண்டாபுரம், கதனநகரம், ஜனகராஜகுப்பம், ஜி.சி.எஸ்.கண்டிகை கி, ஜி.சி.எஸ்.கண்டிகை ஙி, பாலாபுரம், அம்மனேரி, அம்மையார்குப்பம், ஆதிவராகபுரம், செல்லாத்தூர், விளக்கானம்பூடி ஆகிய 17 கிராமப்புற பகுதிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கல்வி, வருவாய், சுகாதாரம், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்த பல்வேறு துறைகளிலுள்ள அலுவலர்கள் களப்பணிக்காக கணக்கெடுப்பாளர்களாகவும் மேற்பார்வையாளர்களாகவும் செயல்படுவார்கள் எனவும், களப்பணிகளுக்கு முன் கணக்கெடுப்பாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

2027 ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமாக வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பிற்கான முன் சோதனையானது 10.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெறவுள்ளது, இதனுடன் 01.11.2025 முதல் 07.11.2025 வரை சுயகணக்கெடுப்பு செய்வதற்கான முன்சோதனையும் நடைபெறவுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.கே.பேட்டை வட்டத்தில் கணக்கெடுப்பு எடுக்கப்படும் மாதிரிப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள், முன்சோதனையின் போது மக்கள் தொகை கணக்கெடுப்பு களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறும், களப்பணியாளர்களுடன் துல்லியமான விவரங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆலோசனை கூட்டம்

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் சட்டமன்ற தொகுதி, வல்லம் வடக்கு ரூ தெற்கு ரூ மத்திய ஒன்றிய திமுக சார்பில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற தலைப்பில் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆலோசனை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், இளம் வழுதி மதிய ஒன்றிய செயலாளர், அஸ். அண்ணாதுரை (வடக்கு ஒன்றிய செயலாளர்), செந்தமிழ்ச்செல்வன் (முன்னாள் எம்.எல்.ஏ.), டாக்டர் சேகர் (அவைத்தலைவர்), மயிலம் சட்டமன்ற உறுப்பினர் மாசிலாமணி (முன்னாள் எம்.எல்.ஏ.), செஞ்சி சிவா (தலைமை தீர்மானக் குழு உறுப்பினர்), வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் பெ. துரை,

அன்புசெயியன் (மாவட்ட கவுன்சிலர்) மற்றும் பல ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி வல்லம் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் டி. ராமகிருஷ்ணன், வல்லம் தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் இ. வெங்கடேசன், வல்லம் மத்திய ஒன்றிய அவைத்தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மயிலம் தொகுதி மேற்பார்வையாளர் புகழேந்தி முன்னிலை வகிக்க, செஞ்சி எம்.எல்.ஏ. கே.எஸ். மஸ்தான் (விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், செஞ்சி சட்டமன்ற உறுப்பினர்) சிறப்புரையாற்றினார்.

மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், தேர்தல் பொதுக்குழு உறுப்பினர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு ஆலோசனை மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக, தற்போது நடைபெற்று வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்க பொதுக்குழு கூட்டம்

வந்தவாசி, நவ 04:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தின் வட்ட பொதுக்குழு கூட்டம் மாவட்ட தலைவர் ரமணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர்கள் வெங்கடேசன், அருள் ஜோதி முன்னிலை வகித்தனர். மாவட்ட இணை செயலாளர் துரை வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, மாவட்ட செயலாளர் தனசேகர் பங்கேற்று சங்க வளர்ச்சி குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் பேசினார். இந்த கூட்டத்தில் தமிழ்நாடு வருவாய் கிராம உதவியாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் மு. பிரபாகரன் தலைமையில் 10 க்கும் மேற்பட்டோர் தங்களை தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தில் இணைத்துக் கொண்டனர். இதில் மாநில செயற்குழு உறுப்பினர் சின்னப்பையன், கங்கா,பவானி, மாநில பொதுச் செயலாளர் ரவி, மாநில அமைப்புச் செயலாளர் பெருமாள், மாநில துணைத் தலைவர் ஆதிலட்சுமி, செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் சேகர், வந்தவாசி வட்டத் தலைவர் ஆர்.தமிழ்மாறன், வட்ட செயலாளர் வி.பாரதி, வட்ட பொருளாளர் கே.பாக்யராஜ், துணைத் தலைவர் மோகன், இணைச் செயலாளர் வி.விஜய குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரங்கநாதன், எம்.தரணி லட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட பொருளாளர் பாபு நன்றி கூறினார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்...

232 மனுக்கள் வரப்பெற்று மேல் நடவடிக்கை ஆட்சியர் உத்தரவு...

ஈரோடு.நவ04

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகவளாகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்ற ஆட்சியர் மேல் நடவடிக்கைக்கு உத்தரவிட்டார்.

வாரந்தோறும் திங்கட்கிழமை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், பொதுமக்களின் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்து பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்.

அந்த மனுக்களில் வீட்டு மனை பட்டா, இலவச வீட்டு மனை, கலைஞர் வீடு கட்டும் திட்டம் மூலம் வீடுகள் கேட்கும், முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை, மகளிர் உதவித்தொகை மற்றும் மாற்று திறனாளிகளுக்கான பல்வேறு சலுகைகள் கேட்கும் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டது.

இதில் மொத்தம் 232 மனுக்கள் பெறப்பட்ட நிலையில், மேல் நடவடிக்கைக்கு ஆட்சியர் உத்தர விட்டார்.

மேலும் மனு கொடுக்க வந்திருந்த மாற்று திறனாளிகள் அமரவைக்கப்பட்டிருந்த இடத்திற்கே நேரில் சென்ற ஆட்சியர் ச. கந்தசாமி அவர்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டு, அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். அவர்களுக்கு உரிய உதவிகளை செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தர விட்டார்.

மேலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட துறைகளில் கீழ், மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் துறைகளில் சார்பிலும் பல்வேறு நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பூந்தமல்லியில் போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு குறித்த மாவட்ட அளவிலான வழிகாட்டுதல் திட்டம் தொடர்பாக துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு கூட்டம்

திருவள்ளூர் நவ 04 : நவ. 4–

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டம் தனியார் பொறியியல் கல்லூரியில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு குறித்த மாவட்ட அளவிலான வழிகாட்டுதல் திட்டம் தொடர்பாக துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ஆவடி மாநகர காவல் ஆணையர் கி.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.முன்னதாக, மாவட்ட ஆட்சியர் ஆவடி மாநகர காவல் ஆணையர் கி.சங்கர் ஆகியோர் தலைமையில் போதை பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு உறுதி மொழியை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். பின்னர் மாவட்ட ஆட்சியர் கூறியதாவது :

போதைப்பொருட்களின் பழக்கத்தை தடுப்பு மற்றும் விநியோகத்தை நிறுத்துவது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மேலும் போதைப்பொருட்களின் பழக்கம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கண்டறிவதற்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக மாவட்ட அளவில் துறைகளுக்கு இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்படுகிறது. மாணவர்களின் எதிர்காலம் நலன் கருதி அவர்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமை ஆவதை தடுக்கும் பொறுப்பு தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையே முழுமையாக சாரும். போதைத்தடுப்பு தொடர்பாக இன்று நம்மிடையே பயிற்சி வழங்க இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு கூட்டம் நடத்தப்படுகிறது.

மேலும்,உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான் எண்ணப் படவேண்டாதார். இக்குறளுக்கு ஏற்ப கற்றோர்கள் மற்றும் சான்றோர்கள் போற்றும் வகையில் நடந்துக் கொள்ளும் விதமாக மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என கூறினார்.

கூட்டத்தில் உதவி ஆணையர் (கலால்) கணேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஸ்ரீராம், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் கதிரவன், காவல் உதவி ஆணையர் (மதுவிலக்கு பிரிவு) பொன் சங்கர், போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு குற்றப் புலனாய்வுப் துறை துணை காவல் கண்காணிப்பாளர் அருண், தனியார் பொறியியல் கல்லூரி முதல்வர் மணி, காவல்துறை அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பூண்டி ஏரி அருகே கிருஷ்ணா கால்வாய் அருகே செல்ஃபி எடுக்கும் போது தவறி விழுந்து இளைஞர் உயிரிழப்பு :

திருவள்ளூர் நவ 04 :

சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக இருப்பது பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் ஆகும். கடந்த சில நாட்களாக செய்த வடகிழக்கு பருவமழை காரணமாக பூண்டி நீர்த்தேக்கம் முழு கொள்ளளவு எட்டியதால் உபரி நீர் கொசஸ்தலை ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. இதனால் பூண்டி நீர்த்தேக்கத்தை பொதுமக்கள் குழந்தைகளுடன் வந்து பார்வையிட்டு செல்வது வழக்கம். அதேபோல் இன்று மாலை சென்னை வியாசர்பாடி பகுதியில் இருந்து பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தை பார்வையிட யாசிக்(22) மற்றும் அவரது நண்பர்கள் பூண்டியிலிருந்து வெளியேறியக்கூடிய நீரை பார்த்து ரசித்தனர்.

அதனை தொடர்ந்து ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா கால்வாய் மூலமாக பூண்டி சத்தியமூர்த்திக்கு நீர் தேக்கத்திற்கு வரக்கூடிய கால்வாயை பார்வையிடும் பொழுது யாசிக் செல்ஃபி எடுக்க முயற்சி செய்தார். அப்பொழுது எதிர்பார்க்காத விதமாக அவர் தண்ணீரில் தவறி விழுந்து விட்டார். தண்ணீர் வேகமாக சென்று கொண்டிருப்பதால் தண்ணீரில் நீந்த முடியாமல் அவர் பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்திற்கு வந்து கொண்டிருக்கிற தண்ணீரில் மூழ்கினார். இதனையடுத்து அருகில் இருந்தவர்கள் கூச்சலிட்டு உடனடியாக தீயணைப்பு படை வீரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் தேடிய பிறகும் அவருடைய உடல் கிடைக்கவில்லை. முழுவதுமாக இருள் சூழ்ந்த நிலையில் தேடும்படி நிறுத்தப்பட்டது.

நாளை அதிகாலை முதல் தேடும் பணி தொடரும் என திருவள்ளூர் தீயணைப்பு படை வீரர்கள் தெரிவித்தனர். இதனால் பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் முழுவதும் பரபரப்பாக காணப்படுகிறது. இது குறித்து புல்லரம்பாக்கம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மழைக்காலங்களில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் இருப்பு உயரும் பட்சத்தில் உபரிநீர் கால்வாய் வழியாக வேகமாக வெளியேறும் போது பொதுமக்கள் யாரும் குளிக்கவோ துணி துவைக்கவோ செல்ஃபி எடுக்கவோ கூடாது என மாவட்ட நிர்வாகம் சார்பில் எச்சரிக்கை விடுத்திருந்தாலும், அதற்கான எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காததால் இது போன்ற நிகழ்வுகள் நிகழ்வதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சங்கராபுரம் சூர்யா ஸ்போர்ட்ஸ் கிளப் மாணவர் குத்துச்சண்டை போட்டியில் சாதனை

சங்கராபுரம் நவ 04

அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற குத்து சண்டை போட்டியில் கள்ளக்குறிச்சி தனியார் கல்லூரியில் பயிலும் சங்கராபுரம் சூர்யா ஸ்போர்ட்ஸ் கிளப் சேர்ந்த மாணவர் சக்தி 60 65 கிலோ எடை பிரிவில் கலந்து கொண்டு எதிர் எதிர்த்து விளையாடிய மூன்று போட்டியாளர்களையும் வென்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இதன் மூலம் ஹரியானாவில் நடக்க விருக்கும் பல்கலைக் கழகங்களுக்கு இடையே யான தேசிய குத்து சண்டை போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளார். மிகக் குறுகிய காலத்தில் கடின பயிற்சி மூலம் இந்த சாதனையை இவர் அடைந்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் பல்வேறு சாதனை மாணவர்களை உருவாக்கி வரும் சூர்யா ஸ்போர்ட்ஸ் கிளப்பின் பயிற்சியாளர் சூரியமூர்த்தி தான் இவரின் பயிற்சியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரட் விலை உயர்வு: அறுவடை பணி தீவிரம்

நீலகிரி: நவ.4–

நீலகிரியில் விளைவிக்கப்படும் கேரட் கிலோ ரூ.65ஆக உயர்ந்துள்ளதால் அறுவடையில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். நீலகிரியில் விளைவிக்கும் கேரட் சென்னை, திருச்சி, நெல்லை மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. கேரட் விலை சில நாள்கள் முன்பு வரை ரூ.30க்கும் கீழே இருந்து வந்த நிலையில் தற்போது விலை உயர்ந்து விற்பனை செய்யப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு ஆளுனர் ஆர்.என். ரவியை மாவட்ட ஆட்சித்தலைவவர் சரவணன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

ஆவடி மாநகராட்சியில் மழைநீர் வடிகால்கள் ரூ. 29,67 கோடி மற்றும் 15 வது நிதிக்குழு மானியம் ரூ.9.76 கோடி மதிப்பிலான பணிகள் : அமைச்சர்கள் அடிக்கல் நாட்டினர் :

திருவள்ளூர் நவ 04 :

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடியிருப்பு பகுதியில் நகராட்சித்துறை மற்றும் குடிநீர் வழங்கல் குறை சார்பில் ஆவடி மாநகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி 202526 ல் ஆவடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடியிருப்பு, ஜோதிநகர்,அண்ணனூர் மற்றும் ரேவா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்கள் ரூ.29,67 கோடி மற்றும் 15வது நிதிக்குழு மானியம் 2024 2025 (ம) 20252026ல் 64 பணிகள் ரூ.9.76 கோடி மதிப்பில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் ஆகியோர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர். அப்பொழுது நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கூறியதாவது நகராட்சி துறை என்பது கிட்டத்தட்ட 25 மாநகராட்சிகள் 138 நகராட்சிகள் 480479 பேரூராட்சிகளாக தொடர்ந்து பதினோராயிரம் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாக நகராட்சியாக துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் ஆண்டுதோறும் 25 ஆயிரம் கோடி ஒதுக்கி ஒரு லட்சம் கோடி 1 முதல் 1ரு லட்சம் கோடி நகராட்சி துறைக்காக வழங்கிய நிலையில் முதலமைச்சரிடம் ஆவடி மாநகராட்சிக்கு சாலை மழை நீர் வடிகால் பணி பூங்கா பணிக்கு தெரு விளக்கு அமைத்தல் குடிநீர் பணிகள் 2865 பணிகளுக்கு 855 கோடி முதலமைச்சர் வழங்கியிருக்கிறார். திருவேற்காடுகாக பாதாள சாக்கடை திட்டத்துக்காக 429 கோடியே 55 லட்சமும் பூந்தமல்லிக்கு ரூ.271 கோடியே 79 லட்சமும் திருவள்ளூருக்கு 3 கோடியே 91 லட்சமும் திருத்தணிக்கு 5.3 கோடி வழங்கி இருக்கிறார்.

ஆவடியில் இருந்து பூந்தமல்லிக்கு சென்னைக்கு குடிநீர் போகிறது எங்களுக்கு குடிநீர் தர வேண்டாமா என கேட்டார் தினமும் 50 தருவதற்காக குடிநீர் வாரியம் சரியாக இருக்கிறது. விரைவில் பைப்லைன் போடப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். அனைவரின் வீட்டிலும் போர்வெல் இருப்பதானால், 24X7 திட்டம் இங்குதான் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.1000 கோடி நிதி தேவைகள் உள்ளது. எனவே ரூ,1500 கோடி நிதி கூடுதலாக தேவைப்படுகிறது இதனை தமிழ்நாடு முதல்வரிடம் கொண்டு சென்று அதனை நிறைவேற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் கூறினார். பின்னர் திருநின்றவூர் நகராட்சி ஈசா ஏரி பகுதியில் நீர்வளத்துறை சார்பில் ரூ. 9.3 கோடி மதிப் பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் தொடர்பாக அமைச்சர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்திரவிட்டனர்.

இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் பி.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ஆணையர் ஆவடி மாநகராட்சி ரா.சரண்யா,மேயர் ஆவடி மாநகராட்சி கு.உதயகுமார், துணை மேயர் சூரியகுமார் திருநின்றவூர் நகர்மன்றத் தலைவர் உஷா ராணி ரவி திருநின்றவூர் நகராட்சி ஆணையர் செல்வி.ஜீவிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் 30 ஆண்டுகளுக்கு பின் நடைபெற்ற மகா கும்பாபிஷேகம்!

சிதம்பரம்: நவ.4–

கடலூரில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது. கடலூர் மாவட்டம் சிதம்பரம் நடராஜர் ஆலயத்திற்குள் சைவ ஆலயமான நடராஜர் சன்னதியும், வைணவ ஆலயமான தில்லை கோவிந்தராஜ பெருமாள் ஆலயமும் அமைந்துள்ளது. இந்த கோயிலில் ஒரே இடத்தில் நின்று சிவனையும், விஷ்ணுவையும் தரிசனம் செய்யலாம். 108 திவ்ய பிரதேசங்களில் 41வது திவ்ய பிரதேசமாக திகழும் தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோயில் திகழ்கிறது.

கிழக்கு நோக்கி ராஜ கோபுரத்துடன் கூடிய தனி கோயிலாக அமைந்துள்ள இவ்வாலயத்தில் புண்டரீகவள்ளி தாயார் சன்னதி, ஆண்டாள் சன்னதி, பலிபீடம், கொடிமரம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் அமைந்துள்ளது. தில்லை திருச்சத்திரக்கூடம் என்றழைக்கப்படும் இக்கோவிலில் மூலவர் கோவிந்தராஜர் அனந்த சயன கோலத்திலும், உற்சவரான தேவாதி தேவன் அமர்ந்த நிலையிலும் அருள் பாலித்து வருகின்றனர்.

தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோயிலில் 30 ஆண்டுகளுக்குப் பின் புனரமைக்கப்பட்டு திருப்பணிகள் முடிந்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெற்றது. முன்னதாக ஆயிரம் கால் மண்டபம் முன்பு உள்ள நடன பந்தலில் கடந்த 30ஆம் தேதி யாகசாலை பூஜைகள் தொடங்கியது. யாகசாலையில் புனித நீர் கலசங்கள் வைக்கப்பட்டு 8 கால பூஜைகள் நடைபெற்று வந்த நிலையில் இன்று 8 வது கால பூஜை முடிவடைந்து பூர்ணாகதியுடன் மகாதீப ஆராதனை நடைபெற்றது.

தொடர்ந்து பட்டாச்சாரியார்கள் புனித நீரை சுமந்து மங்கள வாத்தியங்கள் முழங்க கோவிலை வலம் வந்து வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்பிற்காக கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் இரண்டு டி.எஸ்.பி மேற்பார்வையில் ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுனர். அதே போன்று நடராஜர் கோவில் சுற்றியுள்ள நான்கு ரத வீதிகளிலும் பேருந்துகள் வாகனங்கள் தடைசெய்யப்பட்டு மாற்று பாதைகளில் வாகனங்கள் இயக்கப்படுகிறது.

தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம்: முதியவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு பயன்

சென்னை: நவ.4–

தாயுமானவர் திட்டத்தின் கீழ் இன்று முதல் 6ம் தேதி வரை வீடு வீடாக சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுகின்றனர். தமிழக ரேஷன் கடைகளில், 2.25 கோடி கார்டு தாரர்களுக்கு அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்கள் மாதந்தோறும் வழங்கப்படுகின்றன. கார்டில் உள்ள உறுப்பினர்கள், கடைக்கு சென்று விற்பனை முனைய கருவியில் கைரேகையை பதிவு செய்தால் தான் பொருட்கள் வாங்க முடியும். மூத்த குடிமக்கள், நடக்க முடியாத அளவு உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும், தங்களின் சார்பில் வேறு நபரை அனுப்பி பொருட்கள் வாங்கலாம். இதற்காக அவர்கள், மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எனவே, மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளி கார்டுதாரர்களின் வீடுகளில் நேரடியாக ரேஷன் பொருட்களை வினியோகம் செய்யும் திட்டத்தை தொடங்க அரசுமுடிவுசெய்துள்ளது. எனவே, முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும், 'முதல்வரின் தாயுமானவர்' திட்டத்தை, கடந்த ஆகஸ்டு மாதம் சென்னையில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள பயனாளிகளின் வீட்டிற்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக் கப்படுகின்றன.

மேலும் சிறப்புத் தேவைகள் உள்ளவர்களுக்கு ரேஷன் கிடைப்பதை இந்த திட்டம் உறுதி செய்கிறது. இந்த திட்டத்தின்கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற தகுதியுடையவர்கள். அவர்களுக்கு தேவையான அரிசி, சர்க்கரை, எண்ணெய் மற்றும் பருப்பு உள்ளிட்ட ரேஷன் பொருட்கள் நேரடியாக பயனாளிகளின் வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கப்படும்

அதன்படி தற்போது தாயுமானவர் திட்டத்தில் நேற்று முதல் 6ம் தேதி வரை வீடு வீடாகசென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக்கப்படுகிறது. 65 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று ரேஷன் பொருள் தரப்படுகிறது. தாயுமானவர் திட்டத்துக்கான வயது வரம்பு 70லிருந்து 65ஆக தளர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் 20.42 லட்சம் மூத்த குடிமக்களும் 1.27 லட்சம் மாற்றுத் திறனாளிகளும் பயன் பெறுகின்றனர்.

சென்னையை பொறுத்தவரையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையார், திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் 990 நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள், அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி இன்று முதல் வீடு வீடாக சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம் தொடங்கப்பட்டுள்ளது.

சேலத்தில் தந்தையை கட்டையால் அடித்து கொலை செய்த மகன்.

சேலம். நவ. 4–

சேலம் மாவட்டம் சங்ககிரியை அடுத்த அரசிராமணி குள்ளம்பட்டியில் மகனே தனது தந்தையை கட்டையால் அடித்து கொலை செய்த சம்பவத்தை தொடர்ந்து மகனை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்த இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சேலம் மாவட்டம் சங்ககிரியை அடுத்த அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட குள்ளம்பட்டியைச் சேர்ந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற தங்கவேல் தனது மனைவி பத்மாவதியுடன் வசித்து வந்துள்ளார். இதன்டைய அவரது மகன் விஜயகுமார், தந்தை தங்கவேலுடன் பென்ஷன் பணத்தை கேட்டு அடிக்கடி தகராறு ஈடுபட்டு வந்ததாகவும், கடந்த அக்டோபர் 22 ஆம் தேதி பென்ஷன் பணத்தை கேட்டு மகன் விஜயகுமார், தந்தை தங்கவேலுவை கட்டையால் தாக்கி விட்டு தப்பி ஓடி விட்டதாக கூறப்படுகிறது. அருகில் இருந்தவர்கள் தங்கவேலுவை மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர், 2 ஆம் தேதி அதிகாலையில் பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து தகவல் அறிந்த தேவூர் போலீசார் முன்னதாக அடுத்த அடி தடி தகராறு என்று வழக்கு பதிவு செய்த நிலையில் தற்போது கொலை வழக்காக பதிவு செய்து தங்கவேல் மகன் விஜயகுமாரை கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மகனே தந்தையை கட்டையால் அடித்து கொலை செய்த சம்பவத்தை மகன் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

தமிழக மீனவர்கள் 35 பேரை கைது செய்த இலங்கை கடற்படை : த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம்",

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 35 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், இச்சம்பவத்திற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜயும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த நம் மீனவச் சகோதரர்கள் 35 பேர், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குச் சொந்தமான மூன்று விசைப்படகுகள் மற்றும்ஒருநாட்டுப்படகுறிமுதல்செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்திருப்பது மன வேதனையை அளிக்கிறது. கைது செய்யப்பட்டுள்ள நம் மீனவச் சகோதரர்கள் 35 பேரையும் உடனடியாக விடுவிக்கவேண்டும். அவர்களது படகுகளையும் மீட்டுத்தர வேண்டும். மற்ற மாநில மீனவர்கள் மீது காட்டும் அக்கறையைப் போலவே எங்கள் மீனவர்கள் மீதும் காட்டி, இதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தாமதமின்றி உடனடியாக எடுக்கவேண்டும். ஒன்றிய அரசுக்கு உரிய அழுத்தத்தைத் தமிழக அரசும் தாமதிக்காமல், உண்மையாகத் தர வேண்டும். இனி இதுபோல நடக்காமல் இருக்க,இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஒன்றிய அரசும் தமிழக அரசும் காண வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக அழுத்தமாக வலியுறுத்துகிறேன்.

மனிதாபிமானம் இல்லாத சொந்த குடும்பத்தினர்...

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அனாதையாக விடப்பட்ட முதியவர்...

ஈரோடு.நவ.04

ஈரோடு அரசு தலைமை மருத்துவ மனையில் தன் குடும்பத் தினரால் கைவிடப்பட்டு, அனாதையாக ஒரு முதியவர் இரண்டு நாட்களாக கிடந்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை பழைய மற்றும் புதிய கட்டிடங்களில் செயல்பட்டு வருகிறது. தற்போது பல்வேறு விதமான புதிய அதிநவீன உபகரணங்களை கொண்டு மருத்துவ பயனாளிகளுக்கு நாள்தோறும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் இருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் குழந்தைகள் என இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

இதில் மருத்துவப் பயனாளிகள் பிரிவிலும் மற்றும் வெளி மருத்துவ பயனாளிகள் பிரிவிலும் நாள்தோறும் கூட்டம் அலைமோதுவது வழக்கம். பல்வேறு உடல் ரீதியான உபாதைகளை சரி செய்ய இவர்கள் நம்பி வருவது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை தான். இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் கொடுமுடி பகுதியை சேர்ந்த, அருணாச்சலம் என்ற முதியவரை சிகிச்சைக்காக அவரின் குடும்பத்தினர் குறிப்பாக மகள் மற்றும் உறவினர்கள் காரில் ஏற்றி வந்து நேற்று இரவு அரசு மருத்துவ மனை வளாகத்தில், ஆதரவற்ற நிலையில் அனாதையாக இறக்கிவிட்டு சென்றதாக தெரிய வருகிறது.

அந்த முதியவரால் சரியான முறையில் நடக்க முடியாமலும், பேச முடியாமலும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருந்த நிலையில் இருந்து வருகிறார்.

நேற்று முன்தினம் இரவு முழுவதும் மருத்துவமனை வளாகத்தில் கொசுக்கடியிலும் கடும் குளியலிலும் படுத்திருந்த அவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்த பொதுமக்கள் சிலர் அவருக்கு உணவு மற்றும் டீ குடிநீர் போன்றவற்றை வழங்கினர்.

சுமார் 80 வயது மதிக்கத்தக்க அந்த வயது முதிர்ந்த முதியவர் அருணாசலத்தை சிகிச்சைக்காக அழைத்து வந்து அவரின் குடும்பத்தினர் முறையாக மருத்துவமனையில் அனுமதிக்காமல், ஆதரவற்ற நிலையில் அனாதையாக மருத்துவமனை வளாகத்தில் இறக்கிவிட்டு சென்ற சம்பவம் பொதுமக்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

தான் பெற்ற மகளாலும், சொந்த குடும்பத்தினராலும் உடல் நிலை பாதிக்கப்பட்ட ஒரு முதியவர், அனாதையாக அரசு மருத்துவமனை வளாகத்தில் விடப்பட்டு சென்றது மனிதாபிமானம் என்பது எங்கு உள்ளது..? என்ற கேள்வியை அனைவரின் மனத்திலும் எழாமல் இல்லை.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421